**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 99/2004**

Deposition of **<u>PW.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 25.08.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : கோபி Father's Name : கிருஷ்ணன் (எ) கிருஷ்ணசாமி

துவக்க நேரம்: 12.53 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

1) எனது தகப்பனார் இந்த வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக ஆரம்பத்தில் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை மட்டுமே கோரி வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்தபொழுது 2-ம் பிரதிவாதியின் தந்தை பொன்னுசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2) எனது தகப்பனார் இந்த வழக்கை தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கு மட்டும் பரிகாரம் கோரிதான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது தந்தை வழி பாட்டியான சிவாகமியம்மாள் என்பவருக்கு கடந்த 10.06.1933 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பெற்ற சொத்துக்கள் என்று கூறிதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அதன்பின்னிட்டு மேற்படி வழக்கில் சர்வே எண்கள் 400/7, 400/9 மற்றும் 400/10 ஆகிய சர்வே எண்கள் விடுபட்டு போகிறது என்பதால் தாவாவில் அதனை திருத்தம் செய்து வழக்கை நடத்தி வருகிறோம்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt. 25.08.2025.

3) கடந்த 02.12.2024 அன்று பிரதிவாதிகள் தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்த பின்னிட்டுதான், எனது தகப்பனார் ஒரு ரஜினி என்பவருக்கு தாவா சொத்துகளில் ச.எண்.399/5, 399/14, 399/16 மற்றும் 399/12 ஆகிய சர்வே எண்களை தாவா பிராதுலிருந்து நீக்கறவு செய்ய இடையீட்டு மனு 7/2024, 8/2025 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன்பேரில் திருத்தப்பட்ட வழக்குரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு பிரதிவாதிகள் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கூடுதல் பதிலுரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

4) திருத்தப்பட்ட பிராதுவில் பத்தி எண்.7-ல் நீக்கப்பட்ட சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருத்தப்பட்ட பிராதுவில் பத்தி எண்.4A-ல் சர்வே எண் 400/7-ல் விஸ்தீரணம் 0.05.5 ஏர்ஸ், சர்வே எண் 400/9-ல் விஸ்தீரணம் 0.20.5 ஏர்ஸ், சர்வே எண். 400/10-ல் விஸ்தீரணம் 5-1/2 செண்ட் ஆகிய சொத்துக்களுக்கு மட்டும்தான் நீடு அனுபோக உரிமை கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் சொத்து விவரத்தில் 400/8 விஸ்தீரணம் 0.02.5 ஏர்ஸ் நீளமும் சேர்த்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாவில் 3 சர்வே எண்களுக்கு மட்டுமே நீடு அனுபோக உரிமை கோருவதாக குறிப்பிட்டுவிட்டு அதற்கு முரணாக சொத்துவிவரம், பரிகாரத்தில் 4 சர்வே எண்கள் உள்ள சொத்துக்களுக்கு நீடு அனுபோக உரிமை கோரப்பட்டுள்ளது என்றால் நான்காவதாக குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணில் உள்ள நிலத்தை இணை நிலமாக சேர்த்து அனுபவம் செய்து வருவதால்தான் 4 சர்வே எண்களையும் குறிப்பிட்டு பரிகாரம் கேட்டுள்ளேன்.

5) ச.எண்.400/8-ல் உள்ள நிலத்தை இணை நிலமாக அனுபவம் செய்து வருவதாக வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் நான் சர்வே எண்.400/8 நிலமானது நாங்களும், பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவம் செய்து

வருவதால் வழக்கு சொத்து விவரத்தில் அந்த சர்வே எண்ணும் சேர்த்து குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் சொல்வது போல் ச.எண்.400/8-ல் பாதி பாகம் என்று குறிப்பிட்டு சொத்து விவரத்தில் கூறவில்லை என்றால் ச.எண்.400/8-ல் மொத்த விஸ்தீரணம் 5 ஏர்ஸ் ஆகும். அதில் பாதி பாகம் எனக்கு உரிமையானது என்பதால் 2-1/2 ஏர்ஸ் என்று குறிப்பிட்டுள்ளேன்.

6) என்னிடம் காட்டப்படும் ச.எண்.400/8-ற்குண்டான கணினி பட்டா என்றால் சரிதான். அதில் மேற்படி சர்வே எண்ணில் விஸ்தீரணம் 0.2.50 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.த.சா.ஆ 2-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. 0.2.50 ஏர்ஸ் என்பது 6 செண்ட் நிலம் என்றால் சரிதான். ச.எண்.400/8 -ல் மொத்த விஸ்தீரணமும் 0.2.50 ஏர்ஸ் மட்டுமே உள்ள நிலையில் முழு விஸ்தீரணத்திற்கும் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் எனது சர்வே எண்ணில் 400/8-ல் மட்டும் விஸ்தீரணம் எனது வழக்குரையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

7) என்னிடம் காட்டப்படும் ச.எண்.400/10-ற்குண்டான கணினி பட்டா என்றாலும் அதன் விஸ்தீரணம் 0.32.0 ஏர்ஸ் என்று உள்ளது என்றாலும் மேற்படி பட்டா 2-ம் பிரதிவாதி சிவசுப்ரமணியன் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். ஆனால் ச.எண்.400/10-ல் 5.5 செண்ட் நிலம் எங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி கணினி பட்டா **பி.வா.த.சா.ஆ.3-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது வழக்குரையில் சொத்து விவரத்தில் ச.எண்.400/10-ல் 5.5 செண்ட் நிலம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி சர்வே எண்ணில் மொத்த விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றாலும் எனது அனுபவத்தில உள்ள நிலத்தின் அளவை மட்டும் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி நிலத்திற்கு நான்கு எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt. 25.08.2025.

8) தாவா சொத்து விவரத்தில் உள்ள நான்கு சர்வே எண்களில் எந்த சர்வே எண்ணில் கிணறு, மின்மோட்டார் அமைந்துள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 5-வது பக்கத்தில் எனது பாட்டிக்கு கிரையம் செய்து கொடுத்த நல்லுசாமி குடும்பத்தில் வாரிசுகள் இல்லாததால் நீதிமன்றத்தின்மூலம் சார் பதிவாளர் பதிவேடுகளில் திருத்தம் செய்ய உத்தரவிடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் செய்ய கோரியுள்ள பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரங்கள் சரிவர குறிப்பிடாத காரணத்தால் வழக்கில் நான் கோரியுள்ளவாறு எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9) தாவா திருத்தப்பட்ட பிராதுவில் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சொத்துகளும் 1-ம் பிரதிவாதி பொன்னுசாமிக்கு கடந்த 11.10.1993-ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி எழுதிக்கொண்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் எங்கள் அனுபவத்தில் உள்ள நிலத்தையும் சேர்த்து எழுதிக்கொண்டதால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 1-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பத்திரத்தில் சொத்து விவரம் பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் தவறான சொத்து விவரத்தை காட்டி பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள். மேற்படி சொத்துகளில் 1-ம் பிரதிவாதி அவர் இறக்கும் வரை அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி பாகபாத்திய விடுதலைபத்திரம் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 10 வருடத்திற்கு ஏற்பட்டது என்றால் சரிதான். எனது வழக்குரையில் மேற்படி பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தை ரத்து செய்யக்கோரி எந்த பரிகாரமும் கோரப்படவில்லை என்றால் சரியல்ல, கோரியுள்ளேன். பாகபாத்தியவிடுதலைப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை

என்பதால்தான் மேற்படி பத்திரத்தை ரத்து செய்ய இதுநாள்வரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, பரிகாரம் கோரியுள்ளேன்.

10) 1-ம் பிரதிவாதி பொன்னுசாமி கவுண்டர் இறந்தபின்னிட்டு 2-ம் பிரதிவாதிதான் தாவா சொத்துகளில்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும் அதனால்தான் வருவாய் ஆவணங்கள் 2-ம் பிரதிவாதி பெயரில் பதிவாகியுள்ளது என்றாலும் சரியல்ல. 2-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் சுவாதீனத்தில் இல்லை. வருவாய் ஆவணங்களை கடந்த 1993-ல் ஏற்பட்ட போலியான பாகபாத்தியவிடுதலைப்பத்திரத்தில் அடிப்படையில் தவறாக 2-ம் பிரதிவாதி பெயரில் பெற்றுள்ளார்.அவ்வாறு போலியான பத்திரத்தின் அடிப்படையில் பெறப்பட்ட வருவாய் ஆவணங்களை ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் மேற்கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களின் உண்மையான உரிமையாளர் 2-ம் பிரதிவாதிதான் என்றாலும் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும் சரியல்ல, தாவா சொத்துக்கள் 2-ம் பிரதிவாதிக்கு உரிமையானது அல்ல.

11) தாவா சொத்துக்களில் கடந்த 1933-ம் ஆண்டு முதல் எனது மூதாதையர்கள் அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தாவா சொத்தானது எங்கள் அனுபவத்தில் உள்ளது என்றுதான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எந்த வருடம் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தார் என்றால் கடந்த 2004-ம் ஆண்டு அளவீடு செய்தார். கடந்த 2004-ம் ஆண்டு சர்வேயர் மூலம் தாவா சொத்துக்களை அளவீடு செய்த பின்னர்தான் எந்தெந்த சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் தெரிய வந்ததா என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு தெரியும் என்ற காரணத்தால்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார். கடந்த 2023-ம் ஆண்டு எனது தந்தை இறக்கும்வரை தாவா

பரிகாரத்தில் விளம்புகை கோரி திருத்தம் செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அதற்கான காரணம் தெரியவில்லை.

12) கடந்த 1933-ம் ஆண்டிலிருந்து தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் விளம்புகை பரிகாரத்தை கேட்டு கடந்த 2024-ம் ஆண்டுதான் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது அப்பா இறந்தபின்னிட்டு எங்களை வழக்கின் தரப்பினராக சேர்த்த பின்புதான் மேற்கண்ட நடவடிக்கையே எடுத்தோம். நான் சொல்வது தவறு என்றாலும் எனது தந்தைதான் மேற்கண்ட பரிகாரம் திருத்தம் செய்ய IA. 2/2023 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கு முரணாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 2-ம் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது தந்தை தாக்கல் செய்த வழக்கை நாங்கள் தொடர்ந்து நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கானது பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.57 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt. 25.08.2025.